ATR 226
2.395
9.197

உ

# விக்னேஸ்வர மணி மண்டப

# திறப்பு விழா மலர்



வெளியீடு :

**இ. விக்னராசா**

புன்னாலைக்கட்டுவன்

1972

உ

சிவமயம்

புன்னாலைக்கட்டுவன்

# விக்னேஸ்வர மணி மண்டப

# திறப்புவிழா மலர்



வெளியீடு :

இ. விக்னராசா

புன்னாலைக்கட்டுவன்

24-6-1972

உ

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்
ஆதீனகர்த்தர்

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள்
வழங்கிய

# ஆசியுரை

திரு. இ. விக்னராசா அவர்கள்
புன்னலைக்கட்டுவன்

புன்னலைக்கட்டுவன் ஆயாக்கடவை ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானுக்கு, ஆலயத்தின் அருகாமையில் அழகான விக்னேஸ்வர மணி மண்டபம் அமைத்துள்ளீர்கள்.

மண்டபத் திறப்புவிழாவுக்கு, விழா மலர் ஒன்றும் வெளிவரத் திருவருள் கூட்ட, சிறப்பு மலரையும் வெளியிட்டு உதவ முன்வந்த தங்கள் பெரும்பணிகளைப் பாராட்டி; ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் திருவருட் பொலிவுடன் தாங்கள் சகல ஐஸ்வரியங்களையும் பெற்றுச் சிறப்பாக வாழும்வண்ணம் ஸ்ரீ விக்னேஸ்வரப் பெருமானின் திருவடிகளை வழுத்தி நல்லாசி கூறுகிறோம்.

சுபம்!

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத்தம்பிரான் ஸ்வாமிகள்

உ

# முன்னுரை

தோன்றும் மனிதவர்க்கம் நிலையான, பயனுள்ள தர்மத்தைச் செய்தல்வேண்டும். அதுவும் பிற்சந்ததியாருக்கும் பயனுள்ளதாக அமைய வேண்டும். அத்தகைய நல்லெண்ணத்தால் தூண்டப்பட்ட ஒருவர் சந்தர்ப்பத்தை எதிர்நோக்குவது இயற்கை. அச்சந்தர்ப்பந்தான் ஆயாக்கடவை ஐங்கரன் கோயிலில் நடைபெறும் அன்னதான நிகழ்ச்சியாகும். இறைவன் ஆலயம் பரிசுத்தமுடையதாய் இருக்க வேண்டும். எனவே முன்விதித் தொடர்பு கூட்ட, தீர்த்த அன்னதானமண்டபம் அமைக்க மனம் தூண்டியது. எனினும், இம் மண்டபம் ஒரு சில நாள் உபயோகத்துக்கு அமையாது பிற்சந்ததியாரினதும் கல்வி வளர்ச்சியில் தொடர்புபடவேண்டுமென்பதும் எமது பெரிய அவா.

இம் மண்டபத்தை ஆயாக்கடவை ஐங்கரனுக்கு அர்ப்பணிக்கின்றேன். ஐங்கரனடியார்களும் அவர்தம் பிற்சந்ததியாரும் தமது உடைமைபோல் இம் மண்டபத்தைப் பாதுகாப்பார்களாக. இம் மண்டபம் கல்வி, சமயம், அன்னதானம் முதலிய நற்செயல்களுக்கு உபயோகிக்கப்படல் வேண்டுமென்பது எமது வேண்டுகோளாகும்.

எவ்வித விக்கினங்களும் வராது மணிமண்டபத்தை அருளொளியால் முற்றுப்பெறச் செய்த சித்தி விநாயகனை இதய பூர்வமாக வணங்குகிறேன்.

தம் வரவால் எமது மடத்தைப் பரிசுத்தமடையச் செய்த நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளுக்கும், ஐங்கரனை அர்ச்சிக்கும் ஆயாக்கடவை ஆதீனத்தாருக்கும் எமது வணக்கம் உரித்தாகுக. எமது வேண்டுகோளுக்கிணங்கி இம் மலரைச் சிறப்பிக்க புன்னை ஐங்கரன் கீர்த்தனைகள் தந்து உதவிய 'இயலிசைவாரிதி' பிரமஸ்ரீ என். வீரமணி ஐயர் அவர்களுக்கும், பதிகம் பாடி உதவிய கவிஞர் வி. கந்தவனம் அவர்களுக்கும் என்றும் கடமைப்பாடுடைய நன்றி உரித்தாகுக. மணிமண்டப ஆக்கவேலைகளுக்கு அரிய யோசனைகள் கூறிய அன்பர்களுக்கும் அன்னதான சபையார்க்கும் எமது நன்றி. மணிமண்டபத்தைப் பாதுகாக்கும் கடமைப்பாடுடைய அடியார்களுக்கும் அவர்தம் பிற்சந்ததியாருக்கும் எமது நன்றி என்றும் உரித்தாகுக.

குறுகிய காலத்தில் அச்சுவாகனம் ஏற்றி இம் மலர்வெளிவர உதவிய சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தாருக்கு நன்றியறிதலும் கடமைப்பாடும் உடையேன்.

புன்னாலைக்கட்டுவன் **இ. விக்னராசா**
24-6-72.

# விக்னேஸ்வர மணி மண்டபம்

பணம் படைத்தோர் தம் வாழ்நாளில் வழிவழி மாந்தர் பயன்பெறத் தகுந்த கருமங்களைச் செய்தல் சால்புடைத்து: அவை ஆலயம், அறச்சாலை, கல்விச்சாலை, அரும்பெரும் வாழ்வோடு அமைந்த தொழிற்சாலைகள் என்பன போன்றன. இவ்வித சாலைகள் அமைப்பதும் பிறவித்தொடர்பால் மாத்திரமே அமையும். அத் தொடர்பு கூட்ட அமைந்ததுதான் எம் புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் ஆலய வடபால் அமைந்த **விக்னேஸ்வர மணிமண்டபம்.**

இம் மணிமண்டபம் ஆலய தீர்த்த அன்னதான மண்டபமாக அமைக்கப்பட்டதெனினும், சமயம், சங்கீதம், நடனம் போன்ற கல்வி வளர்ச்சிக்கும் சாதகமாக அமைந்தது குறிப்பிடத் தக்கதும் போற்றப்படத் தக்கதுமாகும். எம் புன்னாலைக் கட்டுவன் கிராமத்தார்க்கும் அயற் கிராமத்தார்க்கும் பொது ஸ்தாபனமில்லாப் பெருங்குறை, மணிமண்டபம் அமைந்ததால் நீங்குகின்றது.

தம் பெரும் பணத்தையும் நேரத்தையும் செலவிட்டுத் திடமான அழகான இயற்கை செயற்கை வசதியோடு அமைந்த மணிமண்டபத்தை ஸ்ரீமான் இ. விக்னராசா அவர்கள் ஆக்கித்தந்தனர். ஸ்ரீமான் விக்னராசா அவர்கள் முன்பும் இதுபோன்ற பல தொண்டுகள் செய்தாரெனினும் மணி மண்டபம் அமைத்து மக்களுக்கும் மக்கள் வழித்தோன்றல்களுக்கும் செய்த இப் பெருந்தொண்டு யாவர் மனத்தையும் என்றும் விட்டகலாது.

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் அருளால் ஸ்ரீமான் விக்னராசா அவர்கள் தோன்றினார்; முன்பு கூறிய பிறவித் தொடர்பால் மணிமண்டபம் அமைத்தார்; இறைவனுக்கும் இறைவனை அவாவுவோருக்கும் ஆன தர்மத்தைச் செய்தார். இன்னும் இதுபோன்ற பல தர்மங்களைச் செய்ய இறைவன் அவருக்கு நல்ல மனதையும் தீர்க்க ஆயுளையும் நல்வாழ்வையும் கொடுத்து நற்பழமரம்போல வாழ அருள்புரிவாராக!

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் அருள் நோக்கால் அவர் வாழ்வு என்றும் நல்வாழ்வாய் அமைவதாக!

**புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச்**
**சித்திவிநாயகர் ஆலய ஆதீனத்தார்.**

# விக்னேஸ்வரரும் விக்னேஸ்வர மணிமண்டபமும்

பல்சீரும், பலபுகழும் பெற்று விளங்குவது புன்னைமா நகரம். இங்கு பலவகைச் சிறப்பினையும் கொண்டது ஆயாக் கடவையென்னும் நற்பதி. இந் நற்பதிதனில் பல்லாண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பெற்றது விக்னேஸ்வரர் ஆலயம். இவ் ஆலயம் ஆரம்பத்தில் மிகச் சிறிதாகவே அமைக்கப்பெற்றது. பின்னர் காலப்போக்கில் ஊரவர்களின் பெரு முயற்சியினாலும் அன்பர்களின் பேருதவியினாலும் இது பெரிதாக்கப்பெற்றது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக விக்னேஸ்வரப் பெருமான் திருவீதியுலாவத் திருத்தேரும், திருவீதியும் அமைக்கப்பெற்றன. இவையெல்லாம் சிறப்புற அமைய முன்னின்றுழைத்தவர் காலஞ்சென்ற பிரமஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களாகும்.

இங்ஙனம் யாவும் சிறப்புற அமையப்பெற்றபோதும் அன்னதானம் செய்ய ஒரு மண்டபமும் விக்னேஸ்வரர் தீர்த்தம் ஆடுவதற்கு ஒரு திருக்கேணியுமில்லாக் குறை பெருங் குறைகளாகக் காணப்பட்டன. இதில் அதிபெருங்குறையாகக் காணப்பட்டது அன்னதானத்துக்கென ஒரு மண்டபமில்லாமையே. இப்பெருங்குறை நீக்கம்பெறத் திருவருள் பாலித்தது. இத் திருவருள் ஓர் அன்பனுக்குக் கிடைத்தது. அவ் அன்பர் தான் திருவாளர் இ. விக்னராசா அவர்கள்.

இவர் பிறர் எவருடைய உதவியும் இன்றித் தானே தனித்து விக்னேஸ்வரர் ஆலயச் சிறப்புக்குப் பெருங் குறையாக இருந்த மணிமண்டபத்தை அமைக்க முன்வந்தமை போற்றுதற்குரிய செயலாம். இவருடைய செயலால் மணிமண்டபமில்லாப் பெருங்குறை நீங்கப்பெற்றது, அன்னதானம் மட்டுமல்லாது வேறு பல விழாக்களும் இடம்பெறுவதற்கு உதவக்கூடிய முறையில் இம் மண்டபத்தை அமைத்துள்ளமை இவரை மேலும் போற்றச் செய்கின்றது. திருக்கோயிலின் வடபால் இம் மணிமண்டபம் அமைந்துள்ளமை இதைச் சிறப்புறச் செய்கின்றது. இவ்வாறு செயற்கரிய செயலைச் செய்து முடித்த திருவாளர் இ. விக்னராசா அவர்களின் திருத்தொண்டு மேன்மேலும் வளரவேண்டுமெனவும் இவர் வாழ்வு நற்பயன் பெற வேண்டுமெனவும் வாழ்த்துகிறோம்,

வாழ்க அவர் நாமம்!
வளர்க அவர் சைவத் தொண்டு!

புன்னாலைக்கட்டுவன் — அன்னதான சபையினர்
21-6-72 — (ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயம்)

உ

சித்திவிநாயகர் துணை

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலய
அன்னதான மணிமண்டப அமைப்பாளர்

## திரு. இ. விக்னேஸ்வரன் அவர்களுக்கு

மேற்படி ஆலய அன்னதான சபையார் அளித்த

# வாழ்த்து

புன்னை நகர்வளரும் பூரணனும் ஐங்கரற்கு
அன்னதான மடம் அமைத்து அழகொழுகக்
கன்னல் அமுதன்னம் கனிந்து படைத்தளிக்கும்
மன்னிடுவிக் னேஸ்வரனும் மாவள்ளல் வாழியவே.

அன்பொழுகப் புன்னைநகர் ஆயாக் கடவைவளர்
இன்பம்அருள் விநாயகனின் இணையடிகள் நெஞ்சிருத்தி
நன்பலவாம் நல்லறங்கள் நானிலத்தில் புரியும்அந்த
பண்புறுவிக் னேஸ்வரனும் பக்தனவன் வாழியவே.

ஆயாக் கடவைவளர் ஆனைமுகன் ஆலயத்தில்
ஓயா தனுதினமும் உளமாரத் தொண்டுசெய்து
தாயான தத்துவனும் தந்திமுகன் அருள்பெற்ற
சேயோன்விக் னேஸ்வரனும் செயலாளன் வாழியவே.

இனித்திடும் இன்சொல்லே இயம்பிடும் நல்நாவன்
கனித்திடும் இறைசேவை காசினியில் பூண்டுள்ளான்
மனித்தப் பிறவியிலே மதக்கரியின் அருளால்கண்
பனிக்கும்விக் னேஸ்வரனும் பண்பாளன் வாழியவே.

மண்டலத்தில் புன்னைநகர் மாபதியா யாக்கடவை
வண்டுலவும் சோலைவளர் வாரணத்தின் அருள்பொலிய
தண்டமிழும் சைவமதம் தான்வளர்க்கும் அன்புதவழ்
தொண்டன்விக் னேஸ்வரனும் தூயவனுர் வாழியவே.

# விக்னேசர் நன்மா மண்டபம்

நேரிசை வெண்பா

மாயாத பற்றுவளர் வண்மையுளப் பாங்கினரை
ஆயாக் கடவையுறை யைங்கரனே — நீயாகச்
சென்று தரித்தருளுந் தேவே யடிமையெமக்
கின்றுள் இனிதளிப்பா யீங்கு.

அறுசீராசிரிய விருத்தம்

காடவர் கோனைத் தொண்டு
கறுப்பிலா வகை புரிந்த
நீடமர் உலகு போற்று
நிமலனுக் கடிமை பூண்ட
வாடவ ரன்றி நீவி
ரறிதிரோ விக்ன ராசன்
தேடொணுச் செம்மல் செல்வம்
தீதிலா நெறியிற் கண்டோன்.

கயமுகன் பதம்ப ணிந்து
கற்றநூற் பொருளு ணர்ந்து
பயமெது மின்றிப் பாரிற்
பண்பினிற் பெற்ற செல்வ
நயமெம தைங்க ரன்றுள்
நலத்தினுக் குரிய தென்று
நியமமொ டர்ச்சித் தண்ணல்
நிலவுல கின்பந் துய்த்தான்.

பொய்யிலா வாழ்வும் போற்று
புண்ணிய வுணர்வுந் தோன்ற
மெய்யெலாம் பொய்யா மாறு
போவதன் முன்னர் பூவிற்
செய்வகை யறிந்து செய்து
செம்மைசேர் நெறியி னின்றுன்
உய்திபெற் றேங்கு தோன்றல்
உயர்விக்ன ராசன் தானே.

சுந்தரம் பிள்ளை யம்மை
சூர்தடி யிளைய தம்பி
இந்திர னென்னப் பெற்ற
இன்தமிழ்க் குழவி விக்னன்
தந்திர உணர்வு சால்பு
தகுவழிச் செலவு மேண்மைச்
சுந்தர உளத்தி னோடு
தும்பியின் தொழும்பி னின்றான்.

சீரிய சிறப்பு நல்கும்
திருமகன் அருளை வேண்டி
நேரிதா நித்ய பூசை
நிறைவுபெற் றேவி ளங்க
காரினை யிகழுங் கையன்
கற்பகம் விரும்பு மண்ணல்
பாரிவிக் னேசர் நன்மா
மண்டபம் குயிற்றி னானே.

கலிவிருத்தம்

இளைய தம்பியி னின்றமிழ்ப் புதல்வன்
இளைய னுமனத் தென்று மிருந்திடத்
துளையு டைக்கைத் தும்பி யைநிதம்
விளைவி லாமனத் தேகொண்டு வேண்டுவம்.

— அன்பன்

# புன்னையம் பதிகம்

உலகினில் அமைதி காண
ஒற்றுமை யுணர்வு பேண
நலமினி தோங்கி யாள
நானிலம் மகிழ்ந்து வாழப்
புலவர்கள் புகழ்ந்து பாடும்
புன்னையங் கடவை கூடும்
திலகநற் சித்திப் பிள்ளை
திருவடி போற்றி செய்வாம்.

நன்னெறி நீதி ஈழ
நாட்டினில் விளங்கி ஆளப்
புன்னெறி யாளர் செய்ய
போக்கினைத் தழுவி யுய்ய
மன்னெறி மலரக் காணும்
புன்னையங் கடவை மாணும்
இன்னருட் சித்திப் பிள்ளை
இணையடி போற்றி செய்வாம்.

செந்தமிழ் அன்னை ஆட்சி
செய்திட வெமக்கு மாட்சி
வந்திட வந்து வந்து
வாழ்வினில் மிகவும் நொந்து
வெந்தவர் தினமு மாவும்
புன்னையங் கடவை மேவும்
செந்திருச் சித்திப் பிள்ளைச்
சீரடி போற்றி செய்வாம்.

வலிமைகள் தமிழர் பெற்றும்
வளர்கலை நிரம்பக் கற்றும்
உலகினில் ஓங்கி என்றும்
உரம்பெற வேண்டு மென்று
கலைநலத் தேரைக் கொண்ட
புன்னையங் கடவை கண்ட
பொலிமுகச் சித்திப் பிள்ளை
பூவடி போற்றி செய்வாம்.

கல்வியுங் கலையும் வேண்டிக்
கவலையில் வாழ்வும் வேண்டிச்
செல்வமுஞ் சிறப்பும் வேண்டித்
திருப்பணி மனமும் வேண்டி
நல்லெழில் **மண்ட பத்தை**
நாட்டிட வருள்வி தைத்த
வல்லநஞ் சித்திப் பிள்ளை
வளலரடி போற்றி செய்வாம்.

முதல்முதல் வந்த பிள்ளை
முழுமுதல் ஞானப் பிள்ளை
இதமுடன் வேண்டும் யாவும்
எளிதினில் அருளும் பிள்ளை
பொதுநலத் தொண்டர் ஏற்றும்
புன்னையங் கடவை போற்றும்
புதுமைசெய் சித்திப் பிள்ளை
பொருளடி போற்றி செய்வாம்.

தன்னலம் அழிக்கும் பிள்ளை
சரிசமம் ஆக்கும் பிள்ளை
முன்னெழுந் தருளும் பிள்ளை
முயற்சிகள் காக்கும் பிள்ளை
தென்னையும் பனையும் சார்ந்த
புன்னையங் கடவை சேர்ந்த
மன்னெழிற் சித்திப் பிள்ளை
மாணடி போற்றி செய்வாம்.

வஞ்சகம் நீக்கித் தீண்டும்
வல்வினை போக்கி ஆண்டு
நெஞ்சினில் இருக்கும் பிள்ளை
நினைக்கமுன் னருளும் பிள்ளை
தஞ்சமென் றடைவார் ஓங்கும்
புன்னையங் கடவை தாங்கும்
குஞ்சரச் சித்திப் பிள்ளைக்
குருவடி போற்றி செய்வாம்.

அறிவினை விரிக்கும் பிள்ளை
அன்பினைப் பெருக்கும் பிள்ளை
நிறைவினை அளிக்கும் பிள்ளை
நின்றெமை யாளும் பிள்ளை
செறிபயிர்ச் செய்கை மேவும்
புன்னையங் கடவைத் தேவர்
அறிவறி சித்திப் பிள்ளை
அருளடி போற்றி செய்வாம்.

ஐயனே பாரென் பார்க்கும்
அப்பனே காரென் பார்க்கும்
மெய்யனே கதியென் பார்க்கும்
விநாயகா துணையென் பார்க்கும்
உய்யவே யருளிக் கொற்றப்
புன்னையங் கடவை யுற்ற
செய்யதேர்ச் சித்திப் பிள்ளை
திருவடி போற்றி செய்வாம்.

## மணிமண்டபம்

பொருந்திய புகழ்ம ணக்கும்
புன்னையங் கடவை மேவும்
வரந்தரு பிள்ளை யாரின்
வனப்புறு கோயிற் பக்கல்
வருந்திய வடியா ராற
மாமணி மண்ட பத்தை
அருந்திரு விக்ன ராசன்
ஆக்கினன் வாழ்க தொண்டே!

பத்தியில் லாத வேலை
பலப்பல மலிந்த நாளில்
இத்திருப் பணியின் மேன்மை
இயம்புதல் எளிதோ கண்ட
நித்தியம் சைவத் தொண்டே
நினைத்திதைச் செய்த அன்பர்
சித்திவி நாய கன்றன்
திருவரு ளாலே வாழ்வார்.

**— கவிஞர் வி. கந்தவனம்**

உ
கணபதி துணை

# புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்தி விநாயகர் கீர்த்தனைகள்

"இயலிசைவாரிதி"
யாழ்ப்பாணம், பிரமஸ்ரீ என். வீரமணி ஐயர் அவர்கள்
இயற்றியவை.

1

## ஆயாக்கடவை ஐங்கரனே அருள்வாய்

ராகம்: கம்பீரநாட்டை தாளம்: ஆதி

பல்லவி

ஆயாக் கடவை ஐங்கரனே — அருள்வாய்
ஓயாதுன் புகழ்நாமம் ஓதியே பாடஅருள்

அனுபல்லவி

தாயான தயாபரா தந்தி முகத்தழகா
சேயேனுன் பாதமலர் செந்தமிழிற் பாடஅருள்

சரணம்

மாயா விசாரங்கள் தோயாமற் புவியினில்
தூயோனே துதிக்கையா துணைசெய் தருள்கணேசா
காயாம்பூ மேனிவண்ணன் கண்ணன் மருமகனே.
நீயே வரம்அருள்வாய் நிர்மலா புன்னைநகர்.

## 2

## புன்னைநகர் வளரும் புனிதன்

ராகம்: கரகரப்பிரியா                                        தாளம்: ஆதி

பல்லவி

புன்னை நகர்வளரும் புனிதா — என்றும்
உன்னையன்றி வேறு உலகில் துணையுமுண்டோ?

அநுபல்லவி

வண்ண மருப்பழகா வாரணத் தந்திமுகா
என்னைக்கண் பாராயோ ஏரம்பனே வாராயோ

சரணம்

மோனைத் தமிழ்அகவல் மூதாட்டி அவ்வைநல்க
ஆனை முகனேஅன்பாய் அருந்தினாய் தீந்தமிழை
பானை வயிற்றழகா பாரதக் கவியழகா
தேனைப் பொழியும்மலர்ச் சோலை வளங்கள்நிறை;

## 3

## ஞானக் கணபதி

ராகம்: ஆனந்தபைரவி                                        தாளம்: ஆதி

பல்லவி

ஞானக் கணபதியின் மோனத் திருவடியைக்
கானம் பாடித் தொழுவாய் — புன்னைவளரும்

அநுபல்லவி

கானக் குறத்திதன்னைக் கந்தன் வதுவைசெய்ய
தானுதவிய தொந்தித் தந்தி முகனேசிவ

சரணம்

கரமலர் தூக்கிஎன்னைக் காத்திடுவாய் கணேசா
சிரமதை நானுமுந்தன் சேவடியில் வைக்கஅருள்
அரனவனின் புதல்வா அரிகேசவன் மருகா
சரவணனின் சோதரா சாரும் ஆயாக்கடவை.

## 4

## சாருமதி மைந்தன்

ராகம் : சாருமதி தாளம் : ஆதி

பல்லவி

சாருமதி மைந்தனே — சற்குணனே
சாம்பசிவன் புதல்வனே சரணம்

அனுபல்லவி

மேருமலை மீது மேவும் மருப்பொசித்து
பாருலகில் எழுதிப் பாரதம் தந்ததேவா

சரணம்

ஐந்து கரனேசிவ சுந்தரி யாள்மகனே
செந்திரு வடிபாடிச் சேவிக்க நீயருள்
மந்திர ஓங்கார மாமறை ரூபனே
புந்தி மகிழ்ந்தமரும் புன்னைநகர் வாசனே.

## 5

## கண்பார்த்தருள்வாய் கணபதியே

ராகம் : சுபபந்துவராளி தாளம்: ஆதி

பல்லவி

கண்பார்த் தருள்வாய் ஐயா — கணபதியே
பண்பாடி உன்னருள் பதம்பாடி நான்துதிக்க

அனுபல்லவி

விண்பாடி ஏத்திடும் விநாயகனே புன்னைத்
தண்ணுயாக் கடவையில் மண்ணோர் புகழுந்தேவா

சரணம்

வாரணத் தண்முகனே வரமருள் கணபதியே
காரண மானமூலா தாரக் குணபதியே
பூரண மெய்ஞ்ஞானம் பொலிந்திடும் தயாநிதியே
தாரணி தனில்உந்தன் தண்மலர்ப் பதம்கதியே.

## 6

## கட்டழகுக் காட்சி

ராகம் : தேஷ் தாளம் : ஆதி

பல்லவி

பட்டுப்பீ தாம்பரத்திலே பஞ்சகச்சம் கட்டியுந்தன்
கட்டழகுக் காட்சியைக் காணவருள் கணபதியே

அனுபல்லவி

பொட்டிலங்கும் நெற்றியிலே புண்ணியவெண் ணீறிலங்க
கட்டிச்சந் தனம்புனுகும் கரம்தொந்தி யிற்கமழ

சரணம்

பொன்னின்முடி துலங்கிட பூமாலை மார்பில்இலங்க
மன்னிடுமோ தகம்தும்பி மாமுகக் கரத்திலேந்தி
புன்னைஆயாக் கடவையில் பூரணமாய் அமர்ந்தருள்
என்னையனே ஏரம்பனே எழிலாய் அலங்கரித்து.

## 7

## ஆறுமுகன் சோதரா

ராகம் : அமிர்தவர்ஷிணி தாளம் : ஆதி

பல்லவி

ஆறுமுகன் சோதரா — ஆறுமுகா
தேறுதல் மொழிகள்சொல்லி தேற்றுதலுன் பாரமையா

அனுபல்லவி

ஏறுமூ ஷிகத்தில்ஏறி எழிலான காட்சிதந்து
ஆறுதல் அருள்வாய்புன்னை ஆயாக்கடவை ஐங்கரா

சரணம்

அல்லும் பகலுமுந்தன் அடியிணைத் தாமரைகள்
சொல்லும் பொருள்நயமும் சோபிக்கப் பாடஅருள்
வெல்லும்அங் குசப்படை விளங்கிடும் பாசமேந்தி
கொல்லும் வினையகற்றி நல்லாசி தந்தருள்வாய்.

## துதிக்கையனே துணை

ராகம்: பாகேஸ்ரீ                                        தாளம் : ஆதி

பல்லவி

உருக்கும் மனத்தில்என்றும் இருக்கும் விநாயகனே
கருக்கும் வினையகற்றிக் காத்தருள் ஐங்கரனே

அநுபல்லவி

பெருக்கும் அருள்பொலியும் பெருமானே முக்கனியின்
தருக்கள் மலியும்புன்னைத் தலஆயாக் கடவையிலே

சரணம்

துதிக்கை யனேஉன்னைத் துணைஎனவே நம்பி
துதிக்கும்என் வினைதீர்த்துத் தூய அருள்புரிவாய்
கதிக்கு உன்னையல்லால் காப்பவர் யாருமில்லை
நதிக்குளிர் மதிச்சடை நாயகனின் புதல்வா.

9

## ஏழிசை பாட அருள்

ராகம் : கல்யாணி                                        தாளம் : ஆதி

பல்லவி

ஏழிசை பாடஅருள் ஏரம்பனே — உந்தன்
தாளிணைத் தாமரைகள் தாரணியி லேதுதித்து

அநுபல்லவி

மேழிசூ ழும்கழனி மேவும் புன்னைநகர்
வாழிய வேகணேசா வாரணத் தண்முகனே

சரணம்

செந்தமிழ் இனித்திடச் சேவடி பாடியே
அந்தமில் லாஅருளை அள்ளிநான் பருகிட
தந்திடு வாய்வரம் தந்தி முகத்தோனே
சிந்தனைச் செல்வமும் சேர வருள்கணேசா;



3

## 10

# சித்திரத் தேர்மீது வந்தான்

ராகம் : சுருட்டி தாளம் : ஆதி

பல்லவி

சித்திரத் தேர்மீது வந்தான் — கணேசன்
அத்திமுகத் தையன்புன்னை ஆயாக் கடவையிலே

அனுபல்லவி

அத்திமுகக் கொம்புமாட அபய வரதமாட
சித்திபுத்தி தேவியாட பத்தருள்ளம் பரிந்தாட

சரணம்

அங்குசப் படையுமாட அழகுப் பாசமுமாட
பொங்கும்அருந் தும்பிமுகம் பொலிந்தபுன் னகையாட
திங்கள்தவழ் முடியாட தினகரன் மதியாட
எங்கும்அவன் அருள்ஆட எழிலாயாக் கடவையில்.

## 11

# ஆனந்தக் கணபதி

ராகம் : காம்போதி தாளம் : ஆதி

பல்லவி

ஆனந்தக் கணபதி ஆயாக் கடவையானை
கானந் தனைப்பாடிக் கழலடி துதிமனமே

அனுபல்லவி

ஞானந் தனைநல்கும் மோனந் தவழும்மூர்த்தி
ஞாலந் தனிலேபுன்னை நன்னகர்க் கொருகீர்த்தி

சரணம்

மோதக மும்அவலும் முக்கனி யும்பருப்பும்
பாத மலர்படைத்துப் பண்ணிசை பாடிடுவாய்
பூதலந் தனில்புன்னைப் புனிதப் பதிவளரும்
மாதவன் மருகனும் மதக்கரி வாரணனும்.

## 12

## வல்லபை நாயகன்

ராகம்: வசந்தா தாளம்: ஆதி

பல்லவி

வல்லபை நாயகனை வரந்தரும் வாரணனை
அல்லும் பகலும்துதி மனமே — புன்னைவளரும்

அநுபல்லவி

வல்லவினை நீக்கி வந்திடும் துயர்போக்கி
நல்ல இதயந்தனில் நாளும் அருள்புரியும்

சரணம்

மாங்கனி வேண்டிஅந்த மாதா பிதாவைவலம்
தாங்களித் தேவந்து தீங்கனி பெற்றதேவன்
பூங்கழல் போற்றிஅன்பர் பூஜிக்க வந்தருள்வாய்
வேய்ங்குழல் கண்ணனும் விரும்பும் மருமகனே.

## 13

## விநாயகனே சரணம்

ராகம்: ரஞ்ஜனி தாளம்: ஆதி

பல்லவி

வெள்ளறுகு துர்வியுன்னை வேண்டியே நான்துதித்தேன்
உள்ளமதில் செந்தமிழும் ஊற்றெடுக்க அருள்கணேசா

அநுபல்லவி

அள்ளக்குறை யாதஅருள் ஆயாக் கடவைத்தேவா
வெள்ளமாய் அருள்பொழிவாய் விநாயகனே சரணம்

சரணம்

அம்புஜப் பாதமலர் அவனியில் துணையெனவே
நம்பி யுனையேநாடி நல்லாயாக் கடவைவந்தேன்
தும்பிமா முகத்தவனே துணைபுரிவாய் ஐயா
குப்பிடும் அடியார்படும் குறைதீர்க்கும் ஏரம்பனே.

## 14

# புன்னைநகர்த் தெய்வம்

ராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

உன்னினைவு கொண்டு ஓடோடி வந்தேனையா
என்னிதயத்தி லென்றும் எழில்நடஞ் செய்கணேசா

அனுபல்லவி

சென்னியில் பொன்முடியும் சொலித்திடப் புவியினில்
மன்னிடும் புன்னைநகர் மகிழ்ந்துறை யும்தேவா

சரணம்

நினைந்து நினைந்து உந்தன் நீழலை வேண்டியே
பணிந்து பணிந்து பாடும் பக்தருக் கிரங்கியே
கனிந் தருள் செய்திடும் கற்பக வாரணனே
புனைந்து தமிழ்மாலை புனித வடிகள் சூட்ட.

## 15

# ஆயாக்கடவைத் தேவா

ராகம்: பூபாளம் தாளம்: ஆதி

பல்லவி

பங்கயப் பாதமலர் பற்றிக் கதறும்என்மேல்
துங்கக் கரிமுகனே தூய அருள்பொழிவாய்

அனுபல்லவி

சங்க நிதியும்நல்ல பதும நிதியும்தந்து
எங்களைக் காத்திடும் ஏரம்பா புன்னைவளர்

சரணம்

ஐங்கரனே சிவ சங்கரனின் மகனே
பொங்கரவம் அணி பூரணி புதல்வனே
மங்கள ஓங்கார மதக்கரி மாமுகனே
அங்குச பாசமேந்தும் ஆயாக் கடவைத்தேவா.

16

## அத்தி முகவன்

ராகம் : ஆனந்தபைரவி தாளம் : ஆதி

பல்லவி

அத்தி முகவனே ஆயாக் கடவைநாதா
இத்தினம் நீஅருள் ஈந்திடுவாய் தேவா

அனுபல்லவி

சித்தி விநாயகனே சிற்பரனே கணேசா
எத்திசையும் ஏத்தும் எழில்புன்னை நகர்வளரும்

சரணம்

ஐந்து கரத்தழகும் ஒற்றைத் தந்தஅழகும்
ஔவைக் கருள்கொடுத்த ஆனை முகத்தழகும்
நைந்துநைந்தே உருக்கும் நளினப் பதவழகும்
தொந்திக் கணபதியே தூய தமிழில்பாட,

17

## ஆதாரமாய் நம்பினேன்

ராகம் : ஷண்முகப்பிரியா தாளம் : ஆதி

பல்லவி

இருள்அகற்றி எந்தன் இடர்நீக்கி நின்ஒளியாம்
அருளதை நீபொழிவாய் ஆனை முகத்தவனே

அனுபல்லவி

வரும்இடர் களைநீக்கி வரமும் அருளிஉந்தன்
திருவருளைப் பொழிவாய் தீன தயாபரனே

சரணம்

பாதார விந்தமதை வாயாரப் பாடியேநான்
ஆதாரமாய் நம்பினேன் ஆயாக் கடவையானே
மாதா பிதாகுரு தெய்வமும் நீயன்றோ
நாதா புன்னைவளர் விநாயகனே அருள்வாய்,

## 18

## சுபமங்கள மூர்த்தி

ராகம் : பேகட  தாளம் : ஆதி

பல்லவி

தந்தருள்வாய் அருள் தந்தி முகத்தையா
உந்தன் பதம்துணேயே உலகினில் நீகதியே

அனுபல்லவி

பந்தம்எல் லாம்அகற்றும் பாசாங்குசப் படையைச்
சுந்தரக் கையில்ஏந்தும் சுபமங் களமூர்த்தி

சரணம்

முன்னம் கயமுகனே மூஷிக மேறிவந்து
அன்னவ னின்அகந்தை அழித்த ஆனேமுகா
கன்னல் கதலிவளர் புன்னே நகர்ப்பதியின்
மன்னவனே ஆயாக் கடவைஐங் கரன்நீயே.

## 19

## நாரணனின் மருகன்

ராகம் : காபி  தாளம் : ஆதி

பல்லவி

அகத்திய மாமுனிக்கு அருளுப தேசஞ்செய்தே
ஜெகத்தில் ஆயாக்கடவை சிறக்கும் விநாயகனே

அனுபல்லவி

அகத்தில் அவ்வைஇருத்தி அகவல் தனேப்பாட
பரத்தில் அவளேத்தும்பிக் கரத்தி லேந்திச்சேர்த்தாய்

சரணம்

பூரணனே அருள்வாய் புன்னே நகர்வளரும்
வாரணனே வருவாய் வரங்களும் தந்திடுவாய்
நாரணனின் மருகா நல்லாயாக் கடவையின்
காரண னேகணேசா கணபதியே சரணம்.

## 20

# தேரில் பவனிவரும் காட்சி

ராகம் : தேஷ் தாளம் : ஆதி

பல்லவி

தேரில் பவனிவரும் காட்சி — எங்கள்
தெய்வீகக் கண்கள்பெற்ற மாட்சி விநாயகன்

அனுபல்லவி

ஊரில் மிளிரும்புன்னை ஆயாக் கடவைதனில்
பாரில் அழகுமலி பதிக்கண பதிவரும்

சரணம்

நாத மணிஒலிக்க வேதச்சக் கரம்சுழல
ஆதவன் மாமதியும் ஆலவட்டம் ஏந்த
பூதலந் தனில்பக்தர் புளகாங் கிதம்எய்த
பாத மலரைப்போற்றி ஓதும் பக்தர்கள்சூழ.

## 21

# புன்னகை புரிந்தான்

ராகம் : கௌரிமனோஹரி தாளம் : ஆதி

பல்லவி

புன்னகை புரிந்தான் புன்னைப்பதிக் கணேசன்
கன்னற் தமிழின்இசைக் கானந் தனைக்கேட்டு

அனுபல்லவி

வன்ன மருப்பசைய வாரணக் கரமசைய
சொன்னயம் நயந்திரு செவிக்குண் டலம்அசைய

சரணம்

செந்தமிழின் அந்தமிலா பைந்தமிழ்ப்பா வந்தருந்தி
கந்தமலர் சுந்தரஞ்சேர் முந்துதமிழ் சிந்தையினில்
தந்திமுகன் விந்தையொடு உவந்தருளும் தந்தனனே
தொந்தியும் அசைந்திடவே புந்தியும் மகிழ்ந்தனனே.

திருச்சிற்றம்பலம்

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்—ள 654-6/72